செ.வெ.எண்:31 நாள்:21.05.2018

**தூத்துக்குடி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.என்.வெங்கடேஷ் இ.ஆ.ப., அவர்கள், பொது மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், 2016-2017-ம் ஆண்டில் நடைபெற்ற 10-ம் பொதுத்தேர்வில் 100 சதவீதம் தேர்ச்சி பெற்ற ஆதிதிராவிடர் நல உயர்நிலைப்பள்ளிகளின் தலைமையாசிரியர் மற்றும் ஆசிரியர் ஆகியோர்களுக்கு ரூ.45 ஆயிரத்திற்கான காசோலையினை வழங்கினார்கள்.**

---

தூத்துக்குடி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.என்.வெங்கடேஷ் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (21.05.2018) மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், பொது மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.என்.வெங்கடேஷ் இ.ஆ.ப., அவர்கள் முதியோர் உதவித்தொகை, திருமண உதவித்தொகை, மாற்றுத்திறனாளிகளுக்கான உதவித்தொகை விலையில்லா வீட்டுமனைப்பட்டா, குடும்ப அட்டைகள், கல்விக்கடன், தொழிற்கடன், சுயஉதவிக்குழுக்கான கடன் போன்ற பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மனுக்களை பொது மக்களிடமிருந்து பெற்று, அவற்றின் மீது உடனடி நடவடிக்கை மேற்கொள்ள சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்கள்.

மேலும், மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பாக, 2016-2017-ம் ஆண்டில் நடைபெற்ற 10-ம் வகுப்பு பொதுத்தேர்வில் 100 சதவீதம் தேர்ச்சி பெற்ற கரிசல்குளம், ஆதிதிராவிடர் நல உயர்நிலைப்பள்ளியின் தலைமையாசிரியர் திரு.ஜே.கோபால் மற்றும் திருமங்கலகுறிச்சி ஆதிதிராவிடர் நல உயர்நிலைப்பள்ளியின் தலைமையாசிரியர் திரு.பே.முருகன் ஆகியோர்களுக்கு தலா ரூ.10 ஆயிரத்திற்கான காசோலையினை மற்றும் நினைவு பரிசுகளையும், கரிசல்குளம், ஆதிதிராவிடர் நல உயர்நிலைப்பள்ளியின் பட்டதாரி ஆசிரியர் (கணிதம்) திரு.கே.பரமசிவன் மற்றும் பட்டதாரி ஆசிரியர் (அறிவியல்) திரு.எம்.ஜெகன், திருமங்கலக்குறிச்சி ஆதிதிராவிடர் நல உயர்நிலைப்பள்ளியின் பட்டதாரி ஆசிரியர் (தமிழ்) திரு.பி.ராமநாதன், பட்டதாரி ஆசிரியர் (கணிதம்) திரு.எம்.ஜெயராஜ், பட்டதாரி ஆசிரியர் (அறிவியல்) திரு.கே.காமராஜ் ஆகிய 5 ஆசிரியர்களுக்கு தலா ரூ.5 ஆயிரத்திற்கான காசோலையினையும், 2017-18-ம் ஆண்டில் நடைபெற்ற 12-ம் வகுப்பு பொதுத்தேர்வில் 100 சதவீதம் தேர்ச்சி பெற்ற 21 ஆதிதிராவிடர் நல விடுதிகளுக்கு நினைவுப்பரிசுகளை, அந்த விடுதிகளின் காப்பாளர்களிடம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.என்.வெங்கடேஷ் இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்கள்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் டாக்டர்.மு.வீரப்பன், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.தி.நவாஸ்கான், ஆதிதிராவிட மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் திருமதி கீதா, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபன்மையினர் நல அலுவலர் திரு.சேகர், உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) திரு.உமாசங்கர் உள்ளிட்ட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தூத்துக்குடி மாவட்டம்.**